

தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 134–வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (29.9.2025) சென்னை தங்கசாலை, மணிக்கூண்டு அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு முன்பாக அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## இஸ்லாமிய மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வக்பு வாரியம் தொடர்பான

# தமிழ்நாடு அரசின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது - முதல்வருக்கு நன்றி!

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே.எம்,காதர் மொகிதீன் அறிக்கை!

திருச்சி, செப். 30 -

வக்பு வாரியம் தொர்பான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் அறிவிப்புக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் நன்றி தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் 27.09.2029 அன்று வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது:

இஸ்லாமிய மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் மற்றும் பெற்றுத் தரும் இயக்கமாக தி.மு.க செயல்பட்டு வருகிறது என்பதற்கு வக்பு வாரியம் தொடர்பான தமிழ்நாடு அரசின் அறிவிப்பு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

முஸ்லிம் சமுதாயத்தின் நன்மைக்காக தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு அனைத்து வகைகளிலும் செயல்பட்டு வருகிறது.

குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிராக நாடாளு மன்றத்தில் குரல் கொடுத்ததுடன் தமிழ்நாடு சட்டப் பேரவையிலும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. அரசு வழக்கு தொடர்ந்தது.

பாலஸ்தீன மக்கள் அனுபவித்து வரும் கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுத்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், காஷ்மீர் மாநில சிறப்பு அந்தஸ்து தொடர்பாகவும் தொடர்ந்து குரல் எழுப்பி வருவது தி.மு.க. அரசு தான். ஒன்றிய அரசு கொண்டு வந்த வக்பு திருத்தச் சட்டத்துக்கு எதிராக தமிழ்நாடு சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த வரிசையில் ஒன்றிய அரசு அவசர கதியில் கொண்டு வந்த ‘உமீத்’ சட்டத்தின்படி தமிழ்நாட்டில் வக்பு வாரியம் அமைக்கப் படாது என்று தமிழ்நாடு அரசு உறுதிபடத் தெரிவித்துள்ளது .

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

## இலங்கை ராணுவத்தினரால் காரைக்கால் மீனவர்கள் கைது; படகுகள் பறிமுதல்!

# மீனவர்களை மீட்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா அறிக்கை!

புதுச்சேரி, செப். 30-

காரைக்கால் மீனவர்கள் இலங்கை ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களது படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. உடனடியாக கைதான மீனவர்களை விடுவிக்கவும் அவர்களது படகுகளை மீட்கவும் ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டார்.

புதுச்சேரி சட்டமன்ற எதிர்கட்சித்தலைவர் இரா. சிவா அறிக்கை வருமாறு:-

காரைக்கால் மீனவ கிராமமான கோட்டுச்சேரி மேட்டைச் சேர்ந்த 12 மீனவர்கள், எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினரால் துப்பாக்கி முனையில் கைது செய்யப்பட்டு, அவர்களது விசைப்படகுகள் பறிமுதல் செய்திருப்பது மிகவும் கண்டனத்திற்குரியது. இந்த மீனவர்கள், தங்கள் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்காக கடலுக்குச் சென்றவர்கள். ஆனால், இலங்கை கடற்படையினரால் தொடரும் அத்துமீறிய செயல், காரைக்கால் மீனவ சமூகத்தின் வாழ்வாதார உரிமைகளை பறித்துள்ளது.



கடந்த ஜனவரி 2025இல் நடந்த துப்பாக்கிச்சூடு மற்றும் கைது சம்பவத்திற்குப் பிறகு மீண்டும் காரைக்கால் மீனவர்களின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டிருப்பது வன்மையாக கண்டிக்க தக்கது. கைது செய்யப்பட்ட செல்வம், வேல்முருகன், சுந்தர், கந்தசாமி, பாலகுரு, ரவி, வசந்த், ஸ்ரீமுருகன், ஏழுமலை, சூரியமூர்த்தி, கோபி, துளசிநாதன் ஆகிய 12 மீனவர்களின் குடும்பத்தினர் கண்ணீர் மல்க ஒப்பாரி வைத்து கதறி வருகின்றனர்.

இலங்கை அரசு தொடர்ந்து மீனவர்களையும், அவர்களது படகுகளையும் பறிமுதல் செய்து கொள்வதும், பின்னர் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் அழுத்தத்தால் ஒன்றிய அரசின் முயற்சியின் காரணமாக மீனவர்கள் மட்டும் விடுவிக்கப்படுவதும், அவர்களது படகுகளை இலங்கையே வைத்துக் கொள்வதுமாக உள்ளது. அவ்வாறு படகுகளை பறி கொடுக்கும் மீனவர்கள் மீண்டும் தங்களது வாழ்க்கையில் உயர்வது என்பது கானல் நீராகிவிடுகிறது. ஒவ்வொரு முறை இலங்கை கடற்படையின் அத்துமீறிய மற்றும் கொடூர செயலால் காரைக்காலைச் சேர்ந்த 25 மீனவர் குடும்பத்தினரின் வாழ்வாதாரம் வீணாகி வருகிறது.

எனவே ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் இந்தப் பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதுடன், அவர்களது படகுகளையும் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை அரசுடன் இராஜதந்திரப் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு, மீனவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். மீனவ சமூகத்தின் வாழ்வாதார உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களது பாதுகாப்பை உறுதி செய்யவும், இலங்கை கடற்படையிடம் சிக்கியுள்ள மீனவர்களை மட்டுமின்றி அவர்களது படகுகளையும் பாதுகாப்பாக மீட்க ஒன்றிய அரசும், புதுச்சேரி மாநில அரசும் உடனடியாக செயல்பட வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## தருமபுரி கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்

# ஜெ.ராஜேஷ் சகோதரர் ஜெ.தினேஷ் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

தருமபுரி, செப். 30 -

தருமபுரி கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ஜெ.ராஜேஷின் சகோதரர் அரசு முதுநிலை வரைவாளர் ஜெ.தினேஷ் ( வயது 42) 28.09.2025 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

பென்னாகரத்தை அடுத்த அரங்காபுரத்தில் வைக்கப்பட்டுள்ள அன்னாரது உடலுக்கு மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வருவாய்த்துறை மற்றும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், என்.கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டனர். அரசு உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்!

கரூரில் நடந்த கழக முப்பெரும் விழாவில் ராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையில் கழகம் தொடங்கப்பட்ட வரலாற்றை சுட்டிக் காட்டிப் பேசிய தலைவர் தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன் என்ற முழக்கத்தையும் முன்வைத்தார். மழை பற்றிக் கவலைப்படாமல் ராபின்சன் பூங்காவில் அன்று கூடிய கூட்டம்தான் தமிழ்நாட்டை, தமிழினத்தை தலைநிமிர்த்தியது. ஏ தாழ்ந்த தமிழகமே என இந்தப்பெருநிலத்தின் அவலநிலையை சுட்டிக்காட்டிய தலைமகன் அண்ணா, இந்த நிலத்தை மீட்டெடுப்பதற்கான வழியையும் காட்டினார். அண்ணாவின் வழியில் அரைநூற்றாண்டுகாலம் தலைவர் கலைஞர் சுமந்த அந்த வரலாற்றுப் பெரும் பொறுப்பை இப்போது கழகத் தலைவர் தன் தோள்களில் தாங்கியிருக்கிறார். இன எதிரிகளின் வஞ்சத்தையும், குலத் துரோகிகளின் துரோகங்களையும் முறியடித்தே தமிழனை, தமிழ்நாட்டை தலைநிமிர்த்தும் பாதையில் பீடு நடை போடுகிறது கழகம்.

தாய்நிலத்திற்கு தமிழ்நாடு என்ற பெயர், இருமொழிக் கொள்கை என தமிழும் தமிழ்நாடு பெருமைப்படும் பணிகளைச் செய்த பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் கடைசிக் கனவு அவரது இறுதி உயிலாக அவர் விட்டுச் சென்ற மாநில சுயாட்சி. இந்திய ஒன்றியத்தில் மாநிலங்களின் சுயாட்சியை நிலைநாட்டுவதன் மூலமே தேசிய இனங்கள் தங்களுடைய அடையாளத்தை இழந்து விடாமல் இருப்பதை உறுதிப்படுத்த முடியும்.

மாநிலங்களுக்கு நிதி வழங்குவதைத் தடுக்கும் வகையிலான ஒன்றிய அரசின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய அண்ணா, இந்திய ஒருமைப்பாட்டைக் காக்க என்ன அதிகாரங்கள் எல்லாம் தேவையோ அதனை மட்டும் ஒன்றிய அரசின் வசம் வைத்துக் கொண்டு மற்ற அதிகாரங்களை மாநிலங்களுக்கு தந்து விட வேண்டுமென்றார். அதிகாரங்களை ஒன்றியத்தில் குவித்து வைத்திருக்கும் கூட்டாட்சியின் கொடுமைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதன் மூலமே மாநில சுயாட்சியை அடைய முடியும் என ‘ஹோம்ரூல்’ பத்திரிக்கையில் எழுதிய கடைசிக் கட்டுரையில் குறிப்பிட்டார். ஒன்றிய அதிகாரக் குவிப்பின் கொடுமைகளையும் அதற்கு மாற்றான மாநில சுயாட்சியின் தேவையையும் மக்களிடம் கலைஞர் எடுத்துச் சென்றார்; கழகத் தலைவர் எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார். அதன் மூலம் தமிழ்நாட்டிற்கு கிடைத்த வெற்றிகள் இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன.

**கொடியேற்றும் உரிமையும் ராஜமன்னார் குழுவும்**

அண்ணாவின் மாபெரும் கனவான மாநில சுயாட்சி குறித்து ஆராய 1969ம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ராஜமன்னார் தலைமையில் குழு அமைத்தார் தலைவர் கலைஞர். சென்னை பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்த லட்சுமணசாமி முதலியார் மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதி சந்திரரெட்டியை உள்ளடக்கிய அந்தக் குழுவின் பரிந்துரைகள் இந்திய ஒன்றியத்தை அதிர வைத்தன. இந்திய ஒன்றியம் வலிமையாக இருக்க வேண்டுமென்றால், மாநிலங்கள் வலிமையாக இருக்க வேண்டுமென்ற அடித்தளத்தை பற்றி அமைந்தன ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள்.

ஆளுநரின் விருப்பப்படி மாநில அமைச்சரவை செயல்பட வேண்டும் என அரசமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை மாற்ற வேண்டும்

இந்திய ஆட்சிப் பணி(IAS), இந்திய காவல் பணி(IPS) உள்ளிட்ட அனைத்திந்திய பணிகள் ரத்து செய்யப்பட வேண்டும்.

ஒன்றிய மற்றும் பொதுப்பட்டியலில் உள்ள குறிப்பிட்ட சில அதிகாரங்களை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்



**மதிவாணன்**
கழக செய்தித் தொடர்பாளர்

குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வர பயன்படுத்தப்படும் சட்டப் பிரிவுகள் 356, 357 மற்றும் 365 ஆகியவற்றை நீக்க வேண்டும்

நிதிக்குழு நிரந்தரமாக்கப்பட வேண்டும்

திட்டக்குழு அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக சட்டப்பூர்வமாக ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்

மாநிலங்களுக்கு இடையிலான குழுக்கள் உடனடியாக அமைக்கப்பட வேண்டும்.

எனப் பரிந்துரைத்தது ராஜமன்னார் குழு. இந்தப் பரிந்துரைகள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநிலங்கள் ஒன்றிய அரசை சார்ந்திருப்பதையும், மாநிலங்களின் வளர்ச்சியை தடுக்கும் வகையிலான சிக்கல்களையும் களைவதற்கான வழியையும் காட்டியது ராஜமன்னார் குழு.

ஒரு வகையில் ராஜமன்னார் குழுவின் அறிக்கை இந்திய ஒன்றிய வரலாற்றை திருத்தி சரியாக எழுதுவதற்கான ஒரு ஆயுதம். ஆளுநர் பதவி தொடர்பான அரசியல் நிர்ணய சபை விவாதத்தில், ஒன்றிய அரசை விட செல்வாக்கான அரசுகள் மாநிலத்தில் அமையும் காலம் வரும் போது ஆளுநரின் அதிகாரங்கள் சிக்கலை உண்டாக்கும் என வாதிடப்பட்டது. நிகழ்காலத்தை முன்னுணர்ந்து பேசப்பட்ட பேச்சு அது. மக்களிடம் செல்வாக்கைப் பெறாத பா.ஜ.க. அரசு மாநிலங்களுக்கு அளித்து வரும் குடைச்சல்கள் நமக்குத் தெரியும். அதற்கெல்லாம் தீர்வுகளை முன்வைத்தது ராஜமன்னார் குழு. அதன் பரிந்துரைகள் அமலுக்கு வந்திருந்தால், மாநிலங்களின் அதிகாரங்கள் காக்கப்பட்டிருக்கும். குஜராத் முதலமைச்சராக இருந்த மோடியும் சிரமப்பட்டிருக்க வேண்டாம்; மோடியின் அதிகார வெறியினால் இன்றைய மாநிலங்களும் சிரமப்பட்டிருக்க வேண்டாம்.

ராஜமன்னார் குழுவின் முக்கியமான பரிந்துரைகளில் ஒன்று மாநிலங்களுக்கிடையேயான குழுக்களை அமைப்பது. குழு அமைத்து அறிக்கை பெற்று அதனை தீர்மானமாக இயற்றிய தலைவர் கலைஞர், அதனை செயல்படுத்தியும் காட்டினார். தலைவர் கலைஞரின் முயற்சியால் உருவான தேசிய முன்னணி, 1989 தேர்தலில் வென்று ஒன்றியத்தில் விபி சிங் தலைமையில் ஆட்சியமைத்தது. அந்த ஆட்சியில் மாநிலங்களுக்கிடையேயான குழு அமைக்கப்பட்டது. 1990 மே மாதம் சமூக நீதிக் காவலர் விபி சிங் தலைமையிலான அரசு மாநிலங்களுக்கிடையேயான குழுக்களை அமைத்து உத்தரவிட்டது.

இதற்கிடையில் மாநிலங்களுக்கான மற்றொரு உரிமையையும் வென்றெடுத்தார் தலைவர் கலைஞர். தொடக்கத்தில் குடியரசு தினம் சுதந்திர தினம் இரண்டிலும் மாநிலத் தலைநகரங்களில் ஆளுநர்கள் கொடியேற்றுவதே வழமையாக இருந்தது. டெல்லியில் சுதந்திர தினத்தன்று பிரதமர்கள் கொடியேற்றுவது போல், மாநில முதலமைச்சர்கள் கொடியேற்றும் உரிமையைப் பெற்ற பெருமை கலைஞரையே சேரும். இந்தியாவின் எல்லா மாநில முதலமைச்சர்களும் இன்று சுதந்திர தினத்தன்று கொடியேற்றுவதற்கு கலைஞரே காரணம். ஆனால் கலைஞரின் ஆரம்பக் கோரிக்கை அதுவல்ல.

தமிழ்நாட்டிற்கென்று தனிக்கொடி வேண்டுமெனக் கோரிக்கை வைத்தார் கலைஞர். அமெரிக்கா போன்ற கூட்டாட்சி நாடுகளில் மாநிலங்களுக்கு தனிக் கொடி வைத்துக் கொள்வதற்கான உரிமையுண்டு. அதே முறையில் தமிழ்நாட்டுக்கு தனிக் கொடி கோரிக்கையை முன்வைத்து, கொடியையும் வடிவமைத்தார். 1970 ஆகஸ்ட் 20 அன்று நாடாளுமன்றத்தில் இது குறித்துப் பேசிய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார், அமெரிக்காவைக் குறிப்பிட்டுப் பேசி மாநிலங்களுக்கான தனிக் கொடியை அனுமதிப்பதற்கான யோசனையில் ஒன்றிய அரசு இருப்பதாகக் கூறினார்.

இந்திய தேசியக் கொடியையும், தமிழ்நாட்டின் அரசுச் சின்னத்தையும் உள்ளடக்கி, வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு கொடியை 1970 ஆகஸ்ட் 27 அன்று டெல்லியில் அறிமுகப்படுத்தினார் தலைவர் கலைஞர். ஜனசங்கம், ஸ்தாபன காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் எதிர்ப்பால் மாநிலங்களுக்கு தனிக் கொடியை அனுமதிக்கும் யோசனையை இந்திரா காந்தி அம்மையார் கைவிட்ட நிலையில்தான் சுதந்திர தினத்தன்று முதலமைச்சர்கள் கொடியேற்றும் உரிமையைப் பெற்றார் கலைஞர்.

அதிமுகவைத் தொடங்கிய எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆன பிறகு முதல்முறையாக கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றி வைத்து விட்டு, மாநில முதலமைச்சர்கள் கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்த நண்பர் கலைஞருக்கு நன்றி எனப் பேசியது வரலாற்றில் பதிவாகியிருக்கிறது. பிரதமர்களுக்கு இருந்த சிறப்பை மாநில முதலமைச்சர்களுக்குப் பெற்றுத் தந்தது இந்திய மாநில சுயாட்சி வரலாற்றில் ஒரு முக்கியமான மைல்கல். தமிழ்நாட்டை மட்டுமல்ல; இந்திய ஒன்றியத்தின் எல்லா மாநிலங்களையும் கலைஞர் தலை நிமிர வைத்தார்.

**மோடியின் அதிகாரக் குவிப்பும் ஸ்டாலின் எனும் தடுப்பரணும்**

கழகத் தலைவர் முதலமைச்சராகப் பதவியேற்ற போது, மாநில சுயாட்சி மிகப்பெரிய ஆபத்தில் இருந்தது. இந்திய வரலாற்றில் அதிகாரத்தை பேய் போல அபகரிக்கும் ஒரு அரசு ஒன்றியத்தில் இருந்தது. 10 ஆண்டுகள் தமிழ்நிலத்தை ஆட்சி செய்த அடிமை அரசின் துணை கொண்டு பல உரிமைகள் பறிக்கப்பட்ட சூழலில்தான் ஆட்சிப் பொறுப்பேற்றார் தலைவர். போராட்டம் என்பதைத் தாண்டி இந்திய அரசியலமைப்பைக் காக்கவும் மாநிலங்களின் உரிமைகளுக்காகவும் தினம் தினம் போர் நடத்திக் கொண்டிருக்கிறார் கழகத்தலைவர்.

‘ஆட்டுக்குத் தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் எதற்கு’ என்றார் பேரறிஞர் பெருந்தகை. ஒன்றிய அரசின் ஏஜெண்ட்தான் ஆளுநர் என்பதால் அந்தப் பொறுப்பில் இருப்பவரை வைத்தே தனது அழிவு அரசியலை செய்யத் தொடங்கினார் மோடி; எந்த மோடி?. குஜராத் முதலமைச்சராக ஆளுநரின் செயல்பாடுகளை கண்டித்த மோடி. பா.ஜ.க.வின் அடிமையாக எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்த போதே ஆளுநரை அத்துமீற விட்டது பா.ஜ.க. திருடனுக்கு தேள் கொட்டியது போல் எடப்பாடி பழனிசாமி அமைதியாக இருந்த போதும், எனக்கு ஒவ்வாததாக இருந்தாலும் தேர்வு செய்யப்பட்ட அரசு இருக்கும் போது நீங்கள் ஆய்வுப் பணிகளுக்கு போகக் கூடாது என ஆளுநரிடம் முகத்திற்கு நேராகவே கண்டித்த தலைவர் அதற்கு முற்றுப் புள்ளியும் வைத்தார்.

கழக ஆட்சி அமைந்த பின்பும் ஆளுநரின் அத்துமீறல் தொடர்ந்தது. மற்ற மாநிலங்கள் எல்லாம் அரசியலமைப்புச் சட்டம் ஆளுநர்பதவிக்குகொடுத்தமரியாதைகளைக்கேள்விக்குள்ளாக்கிய நிலையில், நாகரீகமாக சட்டரீதியான பதிலடிகளையே தந்தார் தலைவர். நூற்றாண்டு பாரம்பரியம் கொண்ட சட்டப்பேரவையின் மாண்புகளைக் காற்றில் பறக்க விட்டு, அரசியல் சட்டத்தை ஆளுநர் மீறிய போது மாண்பிலிருந்து சற்றும் விலகாமல், மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசின் உரிமைகளை நிலைநாட்டினார்.

தமிழ்நாட்டிற்கு மட்டுமல்லாமல் பா.ஜ.க.வின் எதிர்க்கட்சிகள் ஆள்கின்ற எல்லா மாநிலங்களிலும் ஆளுநர்கள் மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுக்கு கொடுக்கிற குடைச்சல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. சட்டப்பேரவை நிறைவேற்றி அனுப்புகிற மசோதாக்களை கிடப்பில் போட்டு, மக்கள் நலத்திட்டங்களுக்கு ஊறு விளைவித்துக் கொண்டிருந்தனர். அதற்கும் முற்றுப் புள்ளி வைத்திரு க்கிறார் கழகத் தலைவர். தொடர் சட்டப் போராட்டங்களின் முடிவில் ஆளுநர் நிலுவையில் வைத்திருந்த மசோதாக்களுக்கு தன்னுடைய சிறப்பு அதிகாரத்தின் மூலம் ஒப்புதல் கொடுத்தது உச்சநீதிமன்றம்.

அதுமட்டுமில்லாமல் ஒட்டு மொத்த இந்திய ஒன்றியத்திற்கும் இந்த தீர்ப்பினால் வழிகாட்டினார் தலைவர். இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்ததிலிருந்து மசோதாக்கள் மீது ஆளுநர் முடிவெடுக்க கால வரையறை இல்லை என்ற ஷரத்திற்கு பின் ஒளிந்திருந்த ஆளுநர்களுக்கு சம்மட்டி அடி கொடுத்தது தீர்ப்பு. சட்டப்பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்கள் மீது ஆளுநர் ஒரு மாதத்தில் முடிவெடுக்க வேண்டுமென தீர்ப்பளித்தது உச்சநீதிமன்றம். மாநிலங்களின் உரிமைகளுக்காக அரசியல் சாசனத்தை திருத்த வேண்டுமென்ற தமிழ்நாட்டின் நீண்ட கால கோரிக்கையில் ஒரு பகுதி நிறைவேறியிருந்தது. ஒரு தீர்ப்பின் மூலம் அரசியல் சட்டத்தை திருத்தி சரியாக எழுதியிருக்கிறார் கழகத் தலைவர் தளபதி. இது தமிழ்நாட்டுக்கு மட்டுமானதல்ல ஒட்டுமொத்த இந்தியாவிற்குமானது. தீர்ப்பை நகல் எடுத்து எல்லா மாநில ஆளுநர்களுக்கும் அனுப்புங்கள் என உத்தரவிட்ட உச்சநீதிமன்றம் குடியரசுத் தலைவருக்கும் கால நிர்ணயம் செய்து உத்தரவிட்டது. குடியரசுத் தலைவர் மூலமாக பா.ஜ.க. அரசு எழுப்பிய கேள்விகள் தொடர்பான வழக்கிலும் கழக அரசு வலிமையான வாதங்களை எடுத்து வைத்துள்ளது. அந்தத் தீர்ப்பைக் குலைப்பதற்கான முயற்சிகளை பா.ஜ.க. அரசு எடுத்து வரும் சூழலில் அரணாக நின்று மாநில உரிமைகளைக் காத்து வருகிறார் தலைவர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் அதிகாரத்தில் தலையிட்ட பா.ஜ.க. அரசு மாநிலங்களை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகளையும் எடுக்கத் தொடங்கி விட்டது. அதன் ஒரு வடிவம்தான் தொகுதி மறுவரையறை. மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்து பல தேசிய இனங்களின் அரசியல் அதிகாரத்தை அழிக்க பா.ஜ.க. தலைப்பட்ட போது அதனை மக்களிடம் எடுத்துச் சென்றார். தேசிய அளவில் பாதிக்கப்படுகிற மாநிலங்களை அழைத்து ஒரே குரலில் எதிர்ப்பை பதிவு செய்தார்.

நாட்டின் பன்முகத்தன்மையை சிதைத்து ஒற்றைத்துவக் கலாச்சாரத்தை நோக்கி நாட்டை நகர்த்த துடிக்கும் பா.ஜ.க. மாநிலங்களின் தனித்தன்மையைக் குலைப்பதன் மூலம் தன் இலக்கை அடைய நினைக்கிறது. கல்வி, கலாச்சாரம் என மாநிலங்களின் தனித்தன்மையை அழிக்கிறது.

குறிப்பாக கல்வியில் தங்களுடைய கொள்கைகளை திணித்து தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கி வருகிறது. தமிழ் மண்ணின் பெருமையையும், எதிர்காலத்தையும் காப்பதற்கான ஒரே வழி மாநில சுயாட்சியை வென்றெடுப்பதுதான். அதற்காகவே ராஜமன்னார் குழு போன்று நீதியரசர் ஜோசப் குரியன் தலைமையிலான உயர்மட்டக் குழுவை அமைத்திருக்கிறார் தலைவர்.

அரசியல்ரீதியாக, நிர்வாகரீதியாக பா.ஜ.க.வின் திட்டங்களை மக்களிடம் அம்பலப்படுத்தி மாநில உரிமைகளின் அரணாக இருக்கும் தலைவரின் அரசுக்கு பா.ஜ.க. தரும் குடைச்சல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. மாணவர்களின் கல்விக்கான நிதியைக் கூட நிறுத்தி வைத்து அழிச்சாட்டியம் செய்து கொண்டிருக்கிறது பா.ஜ.க. கடுமையான நிதி நெருக்கடியிலும் ஒன்றிய அரசு தர வேண்டிய நிதியை மாநில நிதியிலிருந்தே விடுவித்து, அதற்கும் சட்டப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார் தலைவர். தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன் என்ற தலைவரின் அறைகூவல் வெல்ல அவர் கரத்தை வலுப்படுத்துவோம்.

தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்.